**<u>O.S.No. 230/2018</u>**

**<u>DW1 :</u>** <u>செல்லமுத்து</u> தேதி 10.3.2026

<u>பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாதி பாப்பாத்தி (எ) ஜெயலட்சுமி என் உடன் பிறந்த சகோதரி. என் தந்தை ரங்கசாமி கவுண்டருக்கு நானும் வாதியும் தான் வாரிசுகள். தாவா சொத்து என் தாத்தா வழி சொத்து பூர்வீக சொத்து. என் தந்தை 2008 ல் காலமாகிவிட்டார். அவர் இறப்பதற்கு முன்பு மேற்படி சொத்துகள் சம்மந்தமாக ஆவணங்கள் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். வாதியிடம் இருந்தும் எந்த விதமான எழுத்து மூலமான ஆவணம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். என் அப்பாவுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் முத்துசாமி கவுண்டர் மற்றும் நஞ்சப்பகவுண்டர். அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். முத்துசாமிகவுண்டரின் வாரிசுகள் செல்லமுத்து மற்றும் விஸ்வநாதன் மற்றும் ஈஸ்வரி 2 முதல் 4 பிரதிவாதிகள். நஞ்சப்பகவுண்டர் மற்றும் அவர் வாரிசுகளுக்கு தாவா சொத்து உள்ள ஊரில் சொத்து இல்லை வேறு ஊரில் கொடுக்கப்பட்டது. 4.12.1969 பாகப்பிரிவினை பத்திரத்தில் யார் யார் பிரித்து கொண்டார்கள் என்றால் என் அப்பா ரங்கசாமி மற்றும் அவருடைய சகோதரர்கள் முத்துசாமி கவுண்டர் மற்றும் நஞ்சப்பகவுண்டர் ஆகியோர் பிரித்து கொண்டார்கள். மேற்படி பாகப்பிரிவினையில் என் தாத்தா செல்லப்பகவுண்டருக்கும் ஒரு பங்கு கொடுக்கப்பட்டது.என் தாத்தா செல்லப்பகவுண்டருக்கு பிறகு என் அப்பாவிற்கும் என் சித்தப்பா முத்துசாமிக்கும் வர வேண்டும் என்று எழுதப்பட்டது. தாவா ஏ செட்டியூல் சொத்து என் அப்பா ரங்கசாமிக்கு மட்டும் பிரிந்த சொத்து என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் பி செட்டியூல் சொத்து என் அப்பாவிற்கும் முத்துசாமிக்கும் பிரிந்த சொத்துகள் என்றால் சரிதான். தாவா சர்வே பழைய எண் 10 பண்ணாடி தோட்டத்தில் மொத்தம் 3.15 ஏக்கர். அதில் நாங்கள்

அனுபவித்து வருவது கிழபுறமும் தென்புறமும் தடம். தென்புறம் நஞ்சப்பகவுண்டரின் பூமி. பிள்ளையார் கோயில் மற்றும் நஞ்சப்பகவுண்டரின் வீடு ஆகியவை எந்த புறம் உள்ளது என்றால் தென்புறம் நஞ்சப்பகவுண்டரின் வீடு உள்ளது. வடபுறம் முத்துசாமி கவுண்டரின் வீடு உள்ளது. தாவா 4 ம் அயிட்டம் 3.15 ஏக்கர். 5 ம் அயிட்ட சொத்தானது ப க ச எண் 11 ல் 2.25 ஏக்கர் உள்ளது. தாவா 5 ம் அயிட்டத்தில் கறார் செய்து கொள்ளாமல் ஒரு குறிப்பிட்ட பகுதியை தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். அதில் கிணறு உள்ளது. வாசாஆ 1 பத்திரத்தில் உள்ளவாறு தான் தாவா சொத்துகள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 1 பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு சொத்து எதையும் நான் விற்கவில்லை. தாவா பி செட்டியூல் வரப்பாளையம் கிராமம் ப ச எண் 2,9**B**,10,388 அதில் என் அப்பாவிற்கு **½** பங்கும் என் சித்தப்பா முத்துசாமிக்கு **½** பங்கும் பாத்தியப்பட்டவை என்றால் சரிதான். பெருந்துறை சார்பு நீதிமன்றத்தில் நான் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்து பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். பத்திரம் இல்லாததால் பிரிவினை செய்து கொள்ளலாம் என்று பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து பிரிவினை செய்து கொண்டோம். 1 முதல் 4 பிரதிவாதிகளான என் சித்தப்பா முத்துசாமியின் வாரிசுகளும் நானும் சேர்ந்து அ வ எண் 139/2017 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் நாங்கள் தலா **½** பாகமாக பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என் சகோதரி இவ்வழக்கின் வாதியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடன் பிறந்த அக்கா இருப்பதாக அ வ எண் 139/17 ல் சொல்லவில்லை என்றால் சரிதான். பஞ்சாயத்து நடந்து என் அக்காவிற்கு பணம் கொடுத்துவிட்டதாக அ வ எண் 139/17 ல் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிக்கு தெரியாமல் நானும் பிரதிவாதிகளும் சேர்ந்து வாதியின் பங்கை மறைக்கும் எண்ணத்தில் அ வ எண் 139/17 தாக்கல் செய்து செய்துகொண்ட பாகப்பிரிவினை பத்திரம் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா ரங்கசாமி கவுண்டருக்கு பிரிந்த சொத்தையும் என்

சித்தப்பா முத்துசாமிக்கு பிரிந்த சொத்தையும் சேர்த்து தான் அ வ எண் 139/17 வழக்கை நாங்கள் தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். மேற்படி அ வ எண் 139/17 என் சித்தப்பா முத்துசாமியின் ஆண் வாரிசுகளுக்கும் எனக்கும் சேர்த்து சொத்தை பிரித்து கொண்டோம். முத்துசாமியின் பெண் வாரிசுக்கு தொகை கொடுத்துவிட்டதாக பாகப்பிரிவினையில் எழுதி கொள்ளப்பட்டது. மேற்படி அ வ எண் 139/17 நாங்கள் செய்து கொண்ட பாகப்பிரிவினை வாதிக்கு தெரியாது என்றும் பாகப்பிரிவினையை பிரித்து கொடுக்கும்படி வாதி கேட்ட போது நான் அதை மறுத்ததால் பதிவாளர் அலுவலகத்தில் வாதி நகல் எடுத்து பார்த்த போது மேற்படி பாகப்பிரிவினையானதை தெரிந்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. பஞ்சாயத்தில் பாகப்பிரிவினை குறித்து பேசப்பட்டதாக சொல்லப்படுவது குறித்து சாட்சிகள் உள்ளதா என்றால் உள்ளது. பஞ்சாயத்தார் சாட்சிகளை விசாரிக்க போகிறேனா என்றால் கேட்டு தான் சொல்லமுடியும். பஞ்சாயத்து என் அப்பா உயிருடன் இருக்கும் போதே நடந்ததாக எதிர் வழக்குரையில் சொல்லியிருந்தால் தவறு. என் அப்பா இறந்த பிறகு தான் 2014 ல் பஞ்சாயத்து நடந்தது. பஞ்சாயத்து நடந்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை. பஞ்சாயத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் ரங்கசாமி புளியம்பாளையம் சோமசுந்தரம் சுப்பிரமணி சக்கரைமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டார்கள். அவர்கள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை நண்பர்கள். நான் விவசாயம் செய்கிறேன். என்னுடைய எதிர் வழக்குரையில் ரூ.15 லட்சம் என் அக்கா வாதிக்கும் என் அப்பாவிற்கும் கொடுப்பதாக பஞ்சாயத்தில் பேசியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் ரூ.15 லட்சம் இருந்ததற்கான ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. என் அக்கா வாதிக்கு 1984 ல் திருமணம் ஆனது. அவருக்கு 2 ஆண் மக்கள். என் அக்காவின் கணவர் அவரை அடித்து துரத்தி விட்டார் என்றால் சரிதான். அவ்வாறு அடித்ததில் மூளை கோளாறு ஏற்பட்டுவிட்டது. கணவர் வீட்டில் வாதி வாழவில்லை. என் அப்பா இறக்கும் வரை என் அப்பாவுடன் தான் வாதி இருந்தார். தோட்ட வேலைகளை செய்து கொண்டு ஆடு மாடு மேய்து கொண்டு என் அப்பாவுடனேயே இருந்தார். என் தாயார்

வாதி திருமணம் ஆன 3 வருடத்திற்கு பின்னிட்டு இறந்து விட்டார். தாவா சொத்து வானம் பார்த்த பூமி என்றால் சரிதான். கிணறு உள்ளது. பெருந்துறை சிப்காட்டிற்கு பின்னால் தாவா சொத்து உள்ளது. சிப்காட் வந்த பிறகு நிலத்தடி மாசு ஏற்பட்டதால் தண்ணீர் இல்லை என்பதால் விவசாயம் செய்யவில்லை என்றால் சரிதான். மானாவாரி பூமி. மழை பெய்தால் சோளம் விதைப்போம் ஆடு மாடு மேய்பார்கள். விவசாயத்தில் ரூ.15 லட்சம் சம்பாரித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த பணத்தை ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கியில் டெபாசிட் செய்ததாக நான் எதிர் உரையில் சொல்லியிருக்கும் சங்கதிகளுக்கு ஆதரவாக டெபாசிட் ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் நான் டெபாசிட் செய்யவில்லை. வாதியும் அவருடைய தந்தையும் மேற்படி தொகையை பெற்று கொண்டதாக எதிர் உரையில் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. அவ்வாறு தொகை பெற்று கொண்ட பிறகு என் சகோதரியும் என் தந்தையும் சொத்தில் இருந்து விடுதலை பெற்று கொண்டார்கள் என்று எதிர் உரையில் சொல்லியிருக்கும் சங்கதிகள் தவறு என்றால் சரியல்ல. என் தந்தை 2008 ல் இறந்து விட்டதாக சொல்லப்படும் நிலையில் 2014 ல் மேற்படி ரூ.15 லட்சம் பெற்று கொண்டதாக சொல்லப்படுவது பொய் என்று சொன்னால் சரியல்ல.